குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்.
முன்னிலை: திரு. சா. வரதராஜன், பி.ஏ.,பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.
2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 04 ம் நாள் வியாழக்கிழமை
குற்றவியல் பல்வகை மனு எண். 404/2026

சரஸ்வதி (வயது 52/2026),
த/பெ.ஞானம்,
1/628,ஜான்சிராணி காலனி,
மீனம்பட்டி வடக்கு,
சிவகாசி. ...மனுதாரர்/வாகன உரிமையாளர்

/ இடையே/

அரசுக்காக
சார்பு ஆய்வாளர் ,
சாத்தூர் நகர் காவல் நிலையம்,
விருதுநகர் மாவட்டம்.
குற்ற எண்.193/2026 ... புகார்தாரர் /குற்றமுறையீட்டாளர்

மனுதாரர் வழக்கறிஞர் : திரு.அ.அய்யூப்அலிசேட் B.A., B.L.,
அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–2

**உத்தரவு**

1. சாத்தூர் நகர் காவல் நிலைய குற்ற எண்.193/2026 சட்டப்பிரிவு 9 (B) (1) (b) I.E Act இன் படி என்ற வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள TN 95 H 7322 என்ற பதிவெண் கொண்ட MARUTI EECO நான்கு சக்கர வாகனம், கோல்டு லெட்சுமி வெடிகள் – 9 பாக்ஸ் மற்றும் பிஜிலி வெடிகள் – 6 பாக்ஸ் ஆகியவை சமூக நீதிமன்றத்தில் PR.NO பெறாமல் காவல் நிலைய பாதுகாப்பில் இருந்து வருவதால் மேற்படி சொத்தினை தன் வசம் ஒப்படைக்க உத்தரவிட வேண்டி BNSS பிரிவுகள் 497/503–ன் கீழ் மனுதாரர்/எதிரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி வாகனம் மற்றும் வெடிப் பொருட்கள் காவல் நிலையம் வசம் இருக்கும் பட்சத்தில், வாகனத்தின் இன்ஜின் மற்றும் இயந்திரப் பொருட்கள் ஓடும் நிலையில் இல்லாது சேதமடைந்து இயங்காமல் போய்விடும் என்றும், வெடிப்பொருட்கள் பயனற்று போய்விடும் என்றும் அதனை தன்னிடம் திருப்பி வழங்கும் பட்சத்தில் நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவிற்கு கட்டுபடுவதாகவும், வாகனத்தை இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கும் பட்சத்தில் நல்லமுறையில் பாதுகாப்பார் என்றும், வானத்தை விற்கவோ, அடமானம் செய்யவோ, உருமாற்றம் செய்யவோ மாட்டார் என்றும், எவ்வித குற்றச்செயலிலும் ஈடுபடுத்தமாட்டார் என்றும், நீதிமன்றம் உத்தரவிடும் பட்சத்தில் ஆஜர்படுத்துவதாகவும் கூறி, அதை இடைக்கால பராமரிப்புக்காக மனுதாரரிடம் ஒப்படைக்க மனுதாரர் தரப்பில் கேட்கப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர் தரப்பில், நான்கு சக்கர வாகனம் மற்றும் வெடிப் பொருட்களை மனுதாரரிடம் கொடுத்தால் அதை அவர் விற்பனை செய்யவோ அல்லது உருமாற்றம் செய்யவோ கூடும் என்றும், இவ்வழக்கு சொத்தினை சரியாக ஆஜர் படுத்த மாட்டார் என்றும் கூறி, மனுதாரரிடம் ஒப்படைக்க கடுமையாக ஆட்சேபணை செய்யப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் ஆட்சேபனையில் மனுதாரருக்கு வெடிபொருள் தயாரிக்க உரிமம் இருந்தும் பயணியர் வாகனத்தில் வெடிபொருளை கொண்டு சென்று குற்ற

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.06.04 17:37:14 +0530

செயலில் ஈடுபட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டு, வாகனத்தையும், வெடிபொருட்களையும் மனுதாரரிடம் திருப்பி கொடுக்க ஆட்சேபனை செய்யப்பட்டது.

4. இந்த நீதிமன்றம் இருதரப்பு வாதங்களையும், வழக்கு ஆவணங்களையும் நன்கு பரிசீலனை செய்தது.

5. சாத்தூர் நகர் காவல் நிலைய குற்ற எண்.193/2026 சட்டப்பிரிவுகள் 9 (B) (1) (b) I.E Act இன் படி என்ற வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள TN 95 H 7322 என்ற பதிவெண் கொண்ட MARUTI EECO நான்கு சக்கர வாகனம், கோல்டு லெட்சுமி வெடிகள் – 9 பாக்ஸ் மற்றும் பிஜிலி வெடிகள் – 6 பாக்ஸ் ஆகியவை மனுதாரருக்கு சொந்தமானது என்பது மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரம், வாகனத்தின் பதிவுச்சான்று மற்றும் வழக்கு ஆவணங்களில் இருந்து தெரியவருகிறது. மனுதாரருக்கு வெடிபொருள் தயார் செய்ய உரிமம் இருக்கிறது என்பதும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணத்தில் இருந்து தெரிய வருகிறது. இது காவல்துறை தரப்பிலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த நான்கு சக்கர வாகனம் மற்றும் வெடிப் பொருட்களுக்கு இன்றுவரை வேறுயாரும் உரிமை கோரவில்லை.

6. எனவே, Sundara Bai Ambalal Desai –Vs– State of Gujarat 2003 SCC Crl. 1943 என்ற மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின் படியும், மேற்படி வழக்கு சொத்தை மனுதாரர் வசம் திருப்பிக் கொடுக்கும் பட்சத்தில் மனுதாரர் தக்க பிணையதாரர்களை ஆஜர்படுத்த தயாராக இருப்பதாக கூறியதைக் கருத்தில் கொண்டும், பயன்படுத்தாமல் இருந்தால் நான்கு சக்கர வாகனம் மற்றும் வெடிப் பொருட்கள் பயனற்றுபோய்விடும் என்பதாலும், மனுதாரருக்கு தக்க நிபந்தனையின் பேரில் வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள நான்கு சக்கர வாகனம் மற்றும் வெடிப் பொருட்களை இடைக்காலமாக திருப்பிக் கொடுப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுவதால், மேற்சொன்ன வழக்கு சொத்தை மனுதாரர் வசம் இடைக்காலமாக திருப்பிக் கொடுக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்:–

1. மனுதாரர்/உரிமையாளர் ரூபாய்.2,00,000/–க்கு இரண்டு பிணையதாரர்களுடன் பிணைமுறி எழுதிக் கொடுக்க வேண்டும்.
2. மனுதாரர்/உரிமையாளர், வாகனத்தை விற்கவோ, உருமாற்றம் செய்யவோ, அடமானம் வைக்கவோ கூடாது.
3. இந்நீதிமன்ற தலைமை எழுத்தர் முன்னிலையில் வழக்கு சொத்தை புகைப்படம் எடுத்து அதற்கு சாட்சிய சட்டம் படி சான்று மற்றும் பஞ்சநாமா தயார் செய்து அவற்றை வழக்கு கோப்பில் இணைக்க வேண்டும்.
4. வழக்கு விசாரணையின் போது மனுதாரர் வழக்கிடை சொத்தை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும்.
5. வழக்கு விசாரணையின் போது வெடிபொருளின் தன்மையை மனுதாரர் மற்றும் எதிரி ஆட்சேபனை செய்யமாட்டார்கள் என்று தனியாக பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும்.

இந்த உத்தரவு, என்னால் இன்று 04.06.2026 ஆம் தேதி திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.06.04 17:37:18 +0530

நீதித்துறை நடுவர் எண்.II

சாத்தூர்

Visit ecourts.gov.in for updates or download mobile app "eCourts Services" from Android or iOS